

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 235 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 22 – சனிக்கிழமை 05 ஏப்ரல் 2025 – வெளியூர் 28 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 83 - Issue 235 : Thiruvalluvar Year - 2056 - Panguni 22- Saturday 05 April 2025 - Dak 28 Pages ₹ 5.00


‘நீட்’ விலக்கு சட்டத்திற்கு ஒன்றிய அரசு அனுமதி மறுத்துள்ளது, கூட்டாட்சிக் கருத்தியல் வரலாற்றில் ஒரு கருப்பு அத்தியாயம்! இதுகுறித்து விவாதிக்க

# ஏப்.9-ல் சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம்!

## சட்டப்பேரவையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஏப்.5-**

**சட்டப்பேரவையில் நேற்று காலை உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘நீட்’ விலக்கு சட்டத்திற்கு ஒன்றிய அரசு அனுமதி மறுத்துள்ளது, கூட்டாட்சிக் கருத்தியல் வரலாற்றில் ஒரு கருப்பு அத்தியாயம் - என்று குறிப்பிட்டார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் உரையாற்றுகையில், இது தொடர்பாக நாம் எடுக்க வேண்டிய சட்டபூர்வமான நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசிக்க ஏப்ரல் 9 (புதன் கிழமை) அன்று மாலை சென்னை - தலைமைச் செயலகத்தில், சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் நடைபெறும் என்று அறிவித்தார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.4.2025) சட்டமன்றப் பேரவையில், ‘நீட்’ தேர்வு முறையை அகற்றுவதற்கான சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து நடைபெறவுள்ள அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களுடனான கலந்தாலோசனைக் கூட்டம் தொடர்பாக உரையாற்றினார்.

நீட் தேர்வு முறையை அகற்றுவதற்கான சட்டபூர்வமான நடவடிக்கைகள் குறித்து நடைபெறவுள்ள அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களுடனான கலந்தாலோசனைக் கூட்டம் தொடர்பாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

மருத்துவத் துறையில் நமது நாட்டிற்கே முன்னோடியாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. நமது மாநிலத்தில் பல்லாண்டுகளாக பின்பற்றப்பட்ட சிறப்பான மருத்துவக்கல்வி மாணவர் சேர்க்கை முறையே இந்தச் சாதனைகளுக்கு அடிப்படை.

### சமவாய்ப்பை உறுதிசெய்யும் சேர்க்கை முறை!

2006 ஆம் ஆண்டில், மருத்துவம் உள்ளிட்ட அனைத்து தொழிற்பட்டப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வை ரத்து செய்து, பள்ளிகளில் பன்னிரண்டு ஆண்டுகள் பயிலக்கூடிய பள்ளிக்கல்வி மதிப்பெண்களின் அடிப்படையில் சமூகநீதியையும், அனைத்துப் பிரிவு மாணவர்களுக்குச் சமவாய்ப்பையும் உறுதி செய்யக்கூடிய முன்னோடி சேர்க்கை முறையை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கினார்.

சமூகநீதியை நிலைநாட்டி, கிராமப்புறங்களில் வாழக்கூடிய ஏழை, எளிய மாணவர்களின் மருத்துவக் கல்விக் கனவை நனவாக்கக்கூடிய இந்த முறையால்தான் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மருத்துவர்கள் உருவாகும் வாய்ப்பு ஏற்பட்டது. இதன் பயனாக, மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சிறப்பான மருத்துவச் சேவைகளை வழங்கி வருகிறோம்.

### ஏழை, எளிய மாணவர்களுக்கு எட்டாக் கனியாக மருத்துவப் படிப்பு!

ஆனால், நீட் தேர்வு முறை செயல்படுத்தப்பட்ட பின்னர் இந்தத் தேர்விற்கான பயிற்சி வகுப்புகளுக்குச் சென்று பயிற்சி பெற இயலாத கிராமப்புற மாணவர்களுக்கும் ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் மருத்துவப் படிப்பு எட்டாக்கனி ஆகிவிட்டது. மாநிலத்தின் கிராமப்புறப் பகுதிகளிலும் பின்தங்கிய பகுதிகளிலும் வழங்கப்படும் மருத்துவச் சேவைகளையும் எதிர்காலத்தில் இந்த முறை பாதிக்கும்.

### நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையில் - நாம் அமைத்த உயர்நிலைக்குழு!

நீட் தேர்வானது பயிற்சி வகுப்புகளுக்குச் செல்லும் வசதி படைத்த நகர்ப்புற மாணவர்களுக்கு ஆதரவாக அமைந்துள்ளது என்பதிலும், இந்தத் தேர்வின் அடிப்படையிலான மருத்துவ மாணவர் சேர்க்கை முறை சமூகநீதிக்கு எதிரானதாக உள்ளது என்பதிலும், தமிழ்நாட்டு மக்கள், அரசியல் கட்சிகள், சமூகச் சிந்தனையாளர்கள் என அனைவரிடமும் உள்ள கருத்தொற்றுமையின் அடிப்படையில், சரியான மாற்று மருத்துவ மாணவர் சேர்க்கை முறை குறித்து பரிந்துரைப்பதற்காக ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே. இராஜன் அவர்களின் தலைமையில் ஒரு உயர்நிலைக் குழுவினை இந்த அரசு அமைத்தது.

அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், இந்தச் சட்டமன்றப் பேரவையில் 13.09.2021 அன்று, ‘தமிழ்நாடு மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம், 2021’ என்ற சட்டமுன்வடிவு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டும், நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகும் ஆளுநரால் ஒப்புதல் வழங்கப்படாமல் மறுபரிசீலனை செய்திட திருப்பி அனுப்பப்பட்டது. இந்நிலையில் என் தலைமையில் 05.02.2022 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தப்பட்டு, இந்தச் சட்டமுன்வடிவினை மீண்டும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்துவது தொடர்பான தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, 08.02.2022 அன்று சட்டமுன்வடிவு மீண்டும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. பின்னர், ஆளுநர் மூலம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### அனைத்து விளக்கங்களும் – உடனுக்குடன் வழங்கினோம்!

இது குறித்து, ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை, ஆயுஷ் துறை, உள்துறை, உயர்கல்வித் துறை என பல்வேறு அமைச்சகங்கள் கோரிய அனைத்து விளக்கங்களுக்கும் தமிழ்நாடு அரசு உடனுக்குடன் உரிய விளக்கங்களையும் வழங்கியது. ஆனால் இவற்றையெல்லாம் ஏற்காமல், நமது மாணவர்களுக்குப் பெரும் பேரிடியாக ஒன்றிய அரசு. நமது ‘நீட்’ விலக்குச் சட்டத்திற்கு ஒப்புதலை மறுத்துள்ளது என்ற வருந்தத்தக்க செய்தியை இந்தப் பேரவையில் கனத்த இதயத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில சட்டமன்றத்தின் மாண்பினை அவமதித்துள்ள ஒன்றிய அரசின் இத்தகைய எதேச்சாதிகாரப் போக்கு, அரசமைப்புச் சட்டம் தந்துள்ள கூட்டாட்சிக் கருத்தியல் வரலாற்றில் ஒரு கருப்பு அத்தியாயம். தமிழ்நாட்டு மக்களின் எண்ணங்களையும், இந்தப் பேரவையின் தீர்மானங்களையும் ஒன்றிய அரசு கருத்தில்கொள்ளவே இல்லை; இதனை மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

### நமது போராட்டம் முடிந்து விடவில்லை!

பேரவைத் தலைவர் அவர்களே,

ஒன்றிய அரசு நமது கோரிக்கையை நிராகரித்து இருக்கலாம்; ஆனால், நீட் தேர்வு முறையை அகற்றுவதற்கான நமது போராட்டம் எந்த வகையிலும் முடிந்துவிடவில்லை என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் போராட்டத்தின் அடுத்தக் கட்டத்தில் நாம் எடுக்க வேண்டிய சட்டபூர்வமான நடவடிக்கைகள் குறித்து சட்ட வல்லுநர்களிடமும் கலந்தாலோசிக்கப்படும்.

மேலும், இதுதொடர்பாக அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களிடமும் ஒரு கலந்தாலோசனைக் கூட்டம் வரும் 9 ஆம் தேதி அன்று மாலை தலைமைச் செயலகத்தில் நடத்தப்படவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதில் நமது சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு இந்தத் தருணத்தில் தங்கள் (பேரவைத் தலைவர்) வாயிலாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வி கனவோடு பயிலும் இலட்சக்கணக்கான மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் சார்பாக, அவர்களின் கனவை நனவாக்க தமிழ்நாடு அரசு உறுதியோடு சட்டரீதியான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்பதை இந்தப் பேரவையில் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொண்டு, அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

> **“ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில சட்டமன்றத்தின் மாண்பினை அவமதித்துள்ள ஒன்றிய அரசின் இத்தகைய எதேச்சாதிகாரப் போக்கு, அரசமைப்புச் சட்டம் தந்துள்ள கூட்டாட்சிக் கருத்தியல் வரலாற்றில் ஒரு கருப்பு அத்தியாயம். தமிழ்நாட்டு மக்களின் எண்ணங்களையும், இந்தப் பேரவையின் தீர்மானங்களையும் ஒன்றிய அரசு கருத்தில்கொள்ளவே இல்லை; இதனை மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ”**

---

நாடாளுமன்ற மக்களவை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பு!

# முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்க ஒன்றிய அரசு மறுப்பு!

## ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஏப்.5-

வக்ஃப் மசோதா அவசரகதியில் நிறைவேற்றப்பட்டதை கண்டித்து எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டதால், நாடாளுமன்ற மக்களவை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவை நேற்று காலை கூடியதும் இந்திய பொருட்கள் மீது அமெரிக்காவின் வரி உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்கக்கோரி காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் எம்.பிக்கள் வலியுறுத்தினர். ஆனால், இதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் அவை 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர், மீண்டும் கூடியதும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு பேச்சுக்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். அவசர கதியில் நீண்ட நேரம் அவையை நடத்தி வக்ஃப் மசோதாவை நிறைவேற்றியதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டினர். இதையடுத்து, மக்களவை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது. தொகுதி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மோசடி போன்ற முக்கிய பிரச்சினைகள் விவாதிக்கப்படாமல் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதற்கு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

### அமெரிக்கா வரி:

### எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம்!

இதற்கிடையே இந்திய பொருட்கள் மீது அமெரிக்கா வரி விதித்த விவகாரத்தில் ஒன்றிய அரசு உரிய விளக்கம் அளிக்கக்கோரி நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தியப் பொருட்கள் மீது 26 சதவீதம் வரி விதிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது. இது குறித்து நாடாளுமன்றத்தில் விளக்கம் அளிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஒன்றிய அரசு புறந்தள்ளியது.

இந்நிலையில், இந்தியப் பொருட்கள் மீது அமெரிக்கா வரி விதித்த விவகாரத்தில் ஒன்றிய அரசு உரிய விளக்கம் அளிக்கக் கோரி நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பிக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

அப்போது, இந்தியப் பொருட்கள் மீது அமெரிக்கா விதித்துள்ள வரிகள் இந்தியப் பொருளாதாரத்தை முற்றிலும் சீரழிக்கும் என எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டின.

---

‘டாஸ்மாக்’ அலுவலகங்களில் அமலாக்கத்துறை சோதனை:

# உச்சநீதிமன்றத்திற்கு வழக்கை மாற்றக்கோரி மனு!

## தமிழ்நாடு அரசு தாக்கல் செய்தது!

புதுடெல்லி, ஏப்.5-



டாஸ்மாக் அலுவலகங்களில் அமலாக்கத்துறை அண்மையில் சோதனை நடத்தியது. இதற்கு எதிரான வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள நிலையில், அந்த வழக்கை உச்சநீதிமன்றத்திற்கு மாற்றக்கோரி, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா அமர்வில் தமிழ்நாடு அரசு சார்பில் வழக்கறிஞர் விக்ரம் சவுத்ரி முறையீடு செய்தார்.

அமலாக்கத்துறையின் அதிகாரத்திற்கு எதிராக தமிழ்நாடு அரசு சார்பில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களோடு இணைத்து இந்த மனுவையும் விசாரிக்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, வழக்கை வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுப்பதாக உச்சநீதிமன்றம் உறுதியளித்துள்ளது.